அதை எடுத்து அந்தக் கம்பெனியைச் சீர்குலைக்கவிடக்கூடாது. 1,600 பேருக்கு வேலை கிடைக்கிறது; அப்படியானால் குறைந்த பட்சம் அந்தக் கம்பெனியைக் கூட்டுத்துறையிலேயாவது கொண்டு வர முடியுமா என்று பார்க்கவேண்டும் அல்லது அரசே எடுத்து நடத்த முடியுமா, அதை வேறு எந்தத் துறையிலேயாவது எடுக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். இந்த மேனேஜ்மெண்டிடம் அந்தக் கம்பெனி இருந்தால் இனிமேல் அந்தக் கம்பெனி பிழைக்காது என்ற நிலை வந்திருக்கிறது. அதனால் தான் தோழர் கோவிந்தராஜனே உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இதற்கு ஒரு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன். அந்த வேண்டுகோளுக்கு நமது அமைச்சரவர்கள் பதில் அளிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன் தங்கள் மூலமாக.

மாண்புமிகு திரு கே. என். நேரு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய பிரச்சினையைப்பற்றி ஏற்கெனவே முதலமைச்சரவர்களிடம் கலந்தாலோசித்து அரசின் சார்பாக ஹியரிங்குகள் நடத்தப்பட்டு அரசிலிருந்து அவர்களுக்கு லே-ஆப் அளிக்கப் பட்டிருந்ததை ரத்து செய்து அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்படவேண்டுமென்று, முதலமைச்சருடைய உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப் பட்டது. ஆனால், அரசு சொன்ன நடவடிக்கைகள் மீது அவர்கள் இன்றைக்கு நீதிமன்றம் சென்றிருக்கிறார்கள். இதற்கிடையில் 'லே-ஆப்' விட்ட நாட்களில் கூட அவர்களுக்குத் தரக்கூடிய சம்பளம், அதாவது தொழிலாளர்களுக்குத் தரக்கூடிய அந்தப் பாதிச் சம்பளம்கூடத் தரப்படவில்லை என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் சார்பாக உரிய முறைப்படி நடவடிக்கை மேற்கொண்டு அத்தனை தொழிலாளர்களுக்கும் சம்பளம் கிடைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி, அரசே இந்த ஆலையை எடுத்துக்கொள்வதோ, அல்லது கூட்டுறவுத் துறையிலே இதை எடுக்கலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து நல்ல ஒரு முடிவை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-30 மணி.

(ஆ) அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட்டு அமைக்கக் கோரி வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பையில் வழக்கறிஞர் பெரு மக்கள் எல்லாம் சப்-கோர்ட் வேண்டுமென்று கடந்த 2, 3 மாத காலமாக நீதிமன்றத்தைப் புறக்கணித்து வருகிறார்கள்.

தற்போது, நீதிபெற வேண்டுமேயானால், தென்காசி சப்-கோர்ட்டுக்கு மக்கள் எல்லாம் செல்ல வேண்டிய துயரம் இருக்கிறது. நீதி எளிதாகக் கிடைக்க வேண்டுமென்றும் இந்த ஆண்டு சமுதாய நீதி ஆண்டாக விளங்க வேண்டுமென்றெல்லாம் தமிழக அரசு, நம்முடைய மத்திய அரசு இரண்டும் மக்களுக்குத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், ஏழை எளிய மக்கள் எளிதாக, குறைந்த தூரத்தில் குறைந்த நேரத்தில் நீதியைப் பெறுவதற்கு சப்-கோர்ட்டை அம்பையில் நிறுவுவதற்கு அரசாங்கம் உயர் நீதிமன்றத்தோடு கலந்தாலோசித்து ஒரு நடவடிக்கை—துரித நடவடிக்கை—எடுக்க வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 'மென்ஷன்' மூலமாகக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட் அமைக்கக் கோரி, கடந்த மூன்று மாத காலமாக அங்கேயுள்ள வழக்கறிஞர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு வருகின்றனர். ஏறத்தாழ அம்பாசமுத்திரத்தில் பாதிக்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றையதினம் தென்காசி சப்-கோர்ட்டிலே நடந்து கொண்டிருக்கின்றன. அம்பாசமுத்திரத்திலே சப்-கோர்ட் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து ஏற்கெனவே பலமுறை அந்த வழக்கறிஞர் சங்கப் பிரமுகர்கள், அமைச்சர் பெருமக்களையும், அதிகாரிகளையும் சந்தித்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்கு புதிதாக அமைக்கப்படவிருக்கிற சப்-கோர்ட்டை அம்பாசமுத்திரத்திலே அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தில் ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை, அம்பாசமுத்திரம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக அரசுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் அம்பாசமுத்திரத்தில் ஒரு சப்-கோர்ட் அமைப்பதற்கான குறிப்பு, அரசிடமிருந்து உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்க அனுப்பப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்திடமிருந்து கிடைத்த தகவல்படி, அங்கு சப்-கோர்ட் அமைக்கின்ற அந்தக் குறிப்பு, உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் இருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கும்கூட, 'ஹைக்கோர்ட் ரிஜிஸ்ட்ரார்' இடம் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். இதற்கான அறிவிப்பைக் காலதாமதம் இல்லாமல் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அம்பாசமுத்திரத்தில் சப்-கோர்ட் அமைப்பதற்கான குறிப்பு பற்றி, உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.